

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள. அவரின் துறையின் கீழ் அமைந்துள்ள திருவெறும்பூர் தொகுதி சூரியூர் கிராம ஜல்லிக்கட்டு மைதானத்தை பார்வையிட்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன், கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சுதந்திர போராட்ட தியாகி, கொடி காத்த குமரன் அவர்களின் 94 வது நினைவு தினத்தை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி முகாம் அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள தியாகி திருப்பூர் குமரன் திருவுருவப் படத்திற்கு அமைச்சர் சு.முத்துசாமி மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து சம்பத் நகரில் அமைந்துள்ள தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் முழு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநில நிர்வாகிகள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வீரமணி, மாவட்ட நிர்வாகிகள் கே.குமார்முருகேஸ், ஆ.செந்தில்குமார், செல்ல பொன்னி, க.சின்னையன், டி.எஸ்.குமாரசாமி, மாநகரக் கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர்கள் அக்னி சந்துரு, குமாரவடிவேல், துணை மேயர் வே.செல்வராஜ், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## களைகட்டுகிறது சென்னை சங்கமம் – 2026

# சிறப்பாக ஒருங்கிணைத்து வரும் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.14-

“நாளை முதல் களைகட்டுகிறது சென்னை சங்கமம் 2026” என்றும் “இதனைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வருகிறார் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி.” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

**நாளை மறுநாள் முதல் களைகட்டுகிறது சென்னை சங்கமம் 2026.**

**நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான எழுச்சி மேடையாகத் திகழும் சென்னை சங்கமத்திற்கு மீண்டும் நமது திராவிட மாடல் அரசில் புத்துயிர் கொடுத்துள்ளோம். அதனைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வருகிறார் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி.!**

**தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் களிப்புடன் சிறக்க, சென்னையிலும், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ள கலை நிகழ்ச்சிகளை அனைவரும் காண வேண்டும்! வருக... வருக...**

**சென்னை சங்கமம் 2026 திராவிட பொங்கல் வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



உதகை நகராட்சி சார்பில், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா உதகை சிறுவர் மன்ற வளாகத்தில் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர் நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி வரவேற்றார். கழக துணை பொதுச்செயலாளர் ஆ. இராசா எம்.பி. கலந்துகொண்டு பொங்கலிட்டும், உதகை நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், தூய்மை பணியாளர்களுடன் மதிய உணவு அருந்தியும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். இதில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா. ராமசந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் போஜன், நாசர் அலி, இளங்கோவன், Expo செந்தில், பரமேஷ்குமார், வாசிம் ராஜா, ஜார்ஜ், தொரை, சத்தக்கதுல்லா, மற்றும் மதநல்லிக்க ஒருமைபாடு அமைதி குழு நிர்வாகிகள் கிருஷ்ணன், ஹாஜி முகமதலி, லலிதா, பாலசுப்ரமணியன், சுரேஷ், வாசமல்லி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் மேற்கு நகர பொறுப்பாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட பென்ஷன் திட்ட அரசாணை வெளியீடு!

# ஆசிரியர், அரசு ஊழியர்கள் நெஞ்சில் என்றும் நிலை கொண்டுள்ளார் முதல்வர்!

### ஜாக்டோ - ஜியோ பாராட்டு!

சென்னை, ஜன.14-

ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் தாஸ் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட பென்ஷன் திட்டத்தை இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில் முதல்வர் அறிவித்தார். ஆசிரியர், அரசு ஊழியர்கள் நெஞ்சில் என்றும் நிலை கொண்டுவிட்டதமிழ்நாடுமுதல்வருக்கு ஜாக்டோ - ஜியோ சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசாணையில் 50 விழுக்காடு பணி நிறைவு பெறுகின்ற போது கடைசியாக பெறும் ஊதியத்தில் 50 விழுக்காடு பென்ஷன் ஆகவும், வழங்குவது ஒரு உறுதிப்படுத்தப்பட்ட பென்ஷன் ஆக பார்க்க முடிகிறோம். அது மட்டுமல்லாமல் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு குடும்ப பென்ஷன் வழங்குவதும் வரவேற்கத்தக்க விஷயமாக நம்பிக்கை கூறப்பட்ட விஷயமாக பார்க்க முடிகிறது.

மேலும் டி.சி.ஆர்.ஜி. 25 லட்சம் வழங்குவதும் அதைவிட கூடுதலாக தமிழ்நாடு முதல்வர் பணி கொடையை 30 விழுக்காடு வழங்கி இருக்கிறார். இது மேலும் அரசு ஊழியர்கள், ஆசிரியர் மத்தியிலே இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றோம், இதைவிட கூடுதலாக பணி நிறைவு செய்யும் பொழுது தவிர்பு சிபிஎஸ் ஆப்ஷனல் கொடுத்திருப்பது இந்த பரபரப்பு செய்தியாக உள்ளது.

**எதிர்முனை பிரச்சாரங்களை தூள்தூளாக்கியுள்ளது!**

இது ஒரு மனநிறைவான பென்சனாக இது வழங்கப்பட்டிருப்பது எதிர்முனை பிரசாரங்களை தூள்தூளாக்கி இருக்கிறார்கள். மேலும் இடைநிலை ஆசிரியருடைய ஊதிய முரண்பாடுகள் நீக்கி மத்திய ஆசிரியர் இணையாக வழங்க வேண்டும். பி.லிட். தமிழ் படித்தவர்களுக்கு தணிக்கையில் இருந்து நீக்குவது 5400 தணிக்கை தடை நீக்குதல் உள்ளிட்ட எண்ணற்ற கோரிக்கை களை நிவர்த்தி செய்வார், சத்துணவு அங்கன்வாடி, ஊர்ப்புற நூலகர்கள், ஊராட்சி செயலாளர், சாலை பணியாளர் உள்ளிட்ட அனைவரின் கோரிக்கையும் நிறைவேற்றிட வேண்டும்.

**2026ல் முதல்வர் மேலும் பல விடியலை தருவார்!**

இதற்காக தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற மகத்தான தலைவர் மேலும் பல விடியலை தருவார். ஆசிரியர், அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள் தமிழ்நாட்டில் வாழ்நாள் முழுக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்த பென்ஷன் வழங்கிய தமிழக முதல்வருக்கு தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பாகவும் ஜாக்டோ - ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# எழும்பூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

*சென்னை, ஜன.14-*

*தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், சூளை, அங்காளம்மன் கோவில் தெரு, உமா சுராஜ் பேலஸில் பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 500 விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்குப் பச்சரிசி, வெல்லம், நெய், முந்திரி, ஏலக்காய், திராட்சை, காலண்டர் மற்றும் டிஷர்ட், டிராக் பேண்ட் உள்ளிட்ட பொங்கல் பரிசுப் பொருள் தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.*

*இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77வது வட்டத் துணைச் செயலாளர் வீ.கே. ரவி, எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு. சதிஷ்குமார், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, 77வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதிஷ், 99 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.குணா, 108 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 58வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே.பா. ரோஹித்குமார், 77வது வட்டப் பகுதி பிரதிநிதி முனுசாமி, தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, சரவணன், அனிஷ், ரோஷன், சத்யகலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.*





ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழகத்தின் வெற்றியை உறுதி செய்வோம், திராவிட மாடல் அரசின் வெற்றியை மீண்டும் உரக்க சொல்லுவோம்' என்ற கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பரப்புரையை கரூர் சட்டமன்ற தொகுதி, ராமேஸ்வரப்பட்டியில், கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. , அவரது வாக்குச்சாவடியில் வெல்வோம் இருநூறு.. படைப்போம் வரலாறு. பிரச்சாரத்தை மேற்கொண்டார்.



மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியின் பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று கரூர் முதல் சிவகிரி வழியாக பெருந்துறைக்கு புதிய பேருந்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் பேருந்தை வரவேற்று பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் கீழையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு திராவிட மாடல் அரசின் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து, தொடங்கி வைத்த பொங்கல் பரிசு தொகுப்பான அரிசி, வெல்லம், முழு கரும்பு மற்றும் ரூ.3,000/ ரொக்கத்தினை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சிதலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம். மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.அன்பழகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வி.எஸ்.என்.செந்தில், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பரிதி மற்றும் பலர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாபட்டணம் ஒன்றிய இளைஞரணி இணை செயலாளர்கள் சிரஞ்சீவி, கௌதமன் த.வெ.க விலிருந்து விலகி சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில் 50 பேர் கழகத்தில் இணைந்தனர், அயோத்தியாபட்டணம் வடக்கு ஒன்றியத்தில் டி. பெருமா பாளையத்தில் இணைப்பு விழா நடைபெற்றதில் இணைந்தனர். இதில் வடக்கு ஒன்றிய செயலாளர் ரத்தினவேல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ.ஆறுமுகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சங்கர் (ஏ) சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் கோபால்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாரதி,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் லட்சுமண பெருமாள்,ஒன்றிய துணைச் செயலாளர் ஆறுமுகம்,ஒன்றிய பொருளாளர் பழனிவேல்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.